The Cherian FOUNDATION

14th ANNIVERSARY

ஃபவுண்டேஷன் நிறுவிய நாள்: 11.03.2003

RAJ HOLDINGS

# எதிர்காலம் வளம் பெற மாற்றங்கள் புரிவோம்

ஜனவரி-டிசம்பர் 2017 செய்திமடல் | இதழ் 6

இந்த செய்தி மடல் ராஜ் குடும்ப உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் மட்டுமே.

## தி செரியன் ஃபவுண்டேஷன்

### இயக்குநர் உரை



செரியன் ஃபவுண்டேஷன் 2017-18-ம் ஆண்டில், ஏழை புற்றுநோயாளிகளின் வாழ்வின் மாற்றத்தை உண்டாக்கும் நலதிட்டங்களை செயல்படுத்தினோம். அடையார் புற்றுநோய் மருத்துவனையில் உள்ள குழந்தைகள் விளையாட பூங்கா ஒன்றையும் உருவாக்க உதவினோம். மேலும், கீமோதெரபி பெறும் புற்று நோயாளிகளுக்கு ஏற்படும் சமூகம் சார்ந்த பிரச்சனைகளை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். மேலும் அவர்களுக்கு றுபை-குகளை நன்கொடையாக வழங்கினோம்.

நமது நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்ற உதவியாக இருந்து வரும் எங்கள் அறங்காவலற்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
**வல்சா பெஞ்சமின் செரியன்**
இயக்குநர், தி செரியன் ஃபவுண்டேஷன்

**எங்களது ஆறாவது பதிப்பை படித்து மகிழ்வீர்கள் என்று நம்புகிறேன்!**

## முன்னோட்டம் 2017

NGO'S-க்கு நன்கொடை



முடி தான நிகழ்ச்சி



கல்வி உதவி தொகை



கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்





நிதி திரட்டும் நிகழ்ச்சி

WIG நன்கொடை





விளையாட்டு பூங்கா

## தி செரியன் ஃபவுண்டேஷனை பற்றி!

**செயல்நோக்கு அறிக்கை:**
தரமான கல்வி, அடிப்படை ஆரோக்கியம், விழிப்புணர்வு மற்றும் சமூதாய பங்கேற்பின் மூலமாக, ஒரு ஆரோக்கியமான மற்றும் சமூக உணர்வுள்ள சமுதாயத்தை உருவாக்குதல்

The Cherian FOUNDATION

சென்னையில் அமைந்துள்ள தி செரியன் ஃபவுண்டேஷன், 2003 ஆம் ஆண்டு முதல் சமூக சேவையை ஆற்றிவரும் ஒரு தனியார் தொண்டு நிறுவனம். இந்நிறுவனத்தின் நோக்கம், "அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வாய்ப்புகள் இல்லாதவர்களுக்கு வாய்ப்புகளை அமைப்பதே" ஆகும். அவர்கள் வாழ்வில் ஆரோக்கியம் மற்றும் திறன்களை அதிகரிக்க செயல்பட்டு வருகிறது. ராஜ் ஹோல்டிங்ஸ் பணி இடங்களை சுற்றி அமைந்துள்ள பகுதியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குறிப்பாக குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு பல நல்ல திட்டங்களை செயல்படுத்துகிறது. நமது சேவையை விரிவாக்க, RI Dist 3230's Centenary Charitable Trust, Madras Midtown Round Table (MMRT-42), அடையாறு புற்றுநோய் மருத்துவமனை போன்ற நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

நமது மூன்று முக்கிய அம்சங்களாவது:

- கல்வியறிவு
- அடிப்படை ஆரோக்கியம்
- விழிப்புணர்வு மற்றும் சமுதாய பங்கேற்பு

மேலும், கூட்டாண்மை சமுக பொறுப்பு பிரிவாகவும் செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் ராஜ் குளோபல் ஹோல்டிங்கில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் சமுக சேவை செய்ய அடித்தளமாக விளங்குகிறது.

மேலும் விபரங்கள் www.cherianfoundation.org என்ற எங்கள் இனைய தளத்தில் அறிந்துக் கொள்ளலாம், அல்லது 044-4040 4444 என்ற தொலை பேசியில் சார்லஸ் (திட்ட ஒருங்கிணைப்பாளர்) என்பவரிடம் அறிந்துக் கொள்ளலாம்.

# புற்று நோயாளிகளுக்கு உதவுதல்:

## விளையாட்டு பூங்கா

இந்த ஆண்டு புற்றுநோயாளிகளின் வாழ்வின் மாற்றத்தை உண்டாக்கும் நலதிட்டங்களை செயல்படுத்தும் இலக்கோடு செயல்பட்டோம். இதன் முதல் முயற்சியாக, அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் அமைந்துள்ள மகேஷ் மெமோியல் பிரிவின் அருகில் 4,000 சதுர அடியில் சிறுவர் விளையாட்டு பூங்கா ஒன்றை அமைக்க, ரூ. 1,50,000.00



பூங்காவை பத்ம பூஷன் டாக்டர் V. சாந்தா அவர்கள் பார்வையிட்டார்

MMLC#4-க்கு நன்கொடையாக வழங்கினோம். இந்த பூங்கா சிகிச்சை பெறும் குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது

பிப்ரவரி மாதம் 20, தேதி அன்று புற்று நோயிலிருந்து மீண்டவர்களில் ஒருவரான நடிகை. திருமதி கௌதமி அவர்களால் திறந்து வைக்கபட்டது. இந்த திட்டத்திற்கு நிதி திரட்டியதற்காகவும், வெற்றிகரமாக பூங்காவை அமைத்ததற்கும் திருமதி. சாரா B செரியன் அவர்களுக்கு எங்கள் பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறோம்.



MMLC#4-யின் தலைவர் நமது நிறுவனத்தை அங்கிகரித்தல்

அடையாறு புற்றுநோய் மையம், கடந்த 60 ஆண்டுகளாக புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வரும் ஒரு தொண்டு நிறுவனமாகும். இம்மையம் சிறந்த சிகிச்சையை கொடுக்கும் வகையில், 535 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையும், ஆராய்ச்சி பிரிவும், புற்றுநோய் அறிவியல் கல்லூரியும், புற்றுநோய் தடுப்பு மையமும் கொண்டுள்ளது.



புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுடன் இயக்குநர் மற்றும் அறங்காவலர்கள்

## விழிப்புணர்வு

மதுரவாயிலில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் பல்கலைக் கழகத்தின் பயோடெக்னாலஜி துறையினர் மார்ச் 14-ம் தேதி அன்று சர்வசாஸ்திர என்ற தேசிய கருத்தரங்கை நடத்தினர். இக்கருந்தரங்கில், திருமதி சாரா B செரியன் அவர்கள் மாணவர்களுக்கு கிமோதெரபி மேற்கொள்ளும் புற்றுநோயாளிகளின் சமூகம் சார்ந்த பிரச்சனைகளை குறித்து உரையாற்றினார். மேலும், அன்று முடி நன்கொடை நிகழ்ச்சியும் நடைபெற்றது.




அறங்காவலர் திருமதி சாரா B செரியன் உரையாற்றுகிறார்

## WIG நன்கொடை

ஜூன் மாதம், 26-ம் தேதி அன்று, Tangled என்ற திட்டத்தின் கீழ் ஏழை புற்றுநோயாளிகளுக்கு 250 Wig-குகளை நன்கொடையாக வழங்கப்பட்டது.

இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திய திரு. ஜார்ஜ் B செரியன் மற்றும் திருமதி சாரா B செரியன் அவர்களுக்கு எங்களது பாராட்டுக்கள்.




முதல் Wig-யை திருமதி. காயத்திரி பெறுகிறார்

**புற்றுநோயை எதிர்த்து போராடுவதில் முடி இழத்தல் என்பது முக்கியமானது ஒன்றாகும். நீண்ட முடியே அழகின் முக்கியத்துவம் என்று கருத்துள்ள பொருளாதாரத்தில் பின்தங்கி மக்களுக்கு இடையே இது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். ராஜ் ஹேர் இண்டர்நேஷனலின் உதவியுடன் புற்றுநோயாளின் சரும பிரச்சனைகள், மற்றும் பிற தேவைகளை மனதில் கொண்டு தரமான Wig-குகளை வழங்குகிறோம். இதன் மூலம் அவர்களுக்கு நம்பிக்கையும், மகிழ்ச்சியையும் கொடுத்து வருகிறோம்.**



பயன்படுத்தும் விவரங்களுடன் 250 Wigs

அடையார் புற்றுநோய் மருத்தவமனையின் தலைவர் பத்ம விபூஷன் டாக்டர். சாந்தா அவர்கள் இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக இருந்தார். புற்றுநோயிலிருந்து மீண்டவரும், “I Inspire” என்ற புத்தகத்தின் ஆசிரியருமான திருமதி. நீர்ஜா மாலிக் அவர்கள், அடையார் புற்றுநோய் மையத்தின் இயக்குநர் டாக்டர்.T.G. சாகர், டாக்டர் சுரேந்தர், டாக்டர் விதுபாலா மற்றும் புற்றுநோய் துறையில் பணியாற்றும் முக்கிய நபர்கள் பலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.




நன்கொடையாளர்கள் மற்றும் சிறப்பு விருந்தனர்கள்




Wig அணிவது எப்படி என்று விளக்கப்பட்டது

ஜுன் 26-ம் தேதி அன்று, ரேடியோ ஒன் (94.3 FM)-ன் “குட் மார்னிங் சென்னை” என்ற நிகழ்ச்சியின் மூலமாக திருமதி சாரா B செரியன் அவர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.



ஆர். ஜே. சுலபா உடன் திருமதி சாரா B செரியன்



Express Explora FEATURES

THURSDAY 29.6.2017 | 3

## Survivors' hairy tales of happiness

Express Features

The wigs were handed over at the event

முன்னணி செய்தித்தாளில் வெளியிடப்பட்ட செய்தி

## முடி தான நிகழ்ச்சி

ஜுலை 12-ம் தேதி எங்களது இயக்குநர், குண்டூர் சுப்பையா பிள்ளை தி. நகர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முடி நன்கொடை நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சி முதல்முறையாக சென்னை அரசு உதவி பெறும் பள்ளியில் நடைப்பெறுகிறது. 50-க்கும் மேற்பட்ட குழந்தைகள் முடியை தானம் செய்தனர்.



வெட்டிய முடியை இயக்குநரிடம் சமர்ப்பித்தல்



முடி நன்கொடையாளர்கள்

# CHARITY BAZAAR

## வருடாந்திர நிதி திரட்டும் நிகழ்ச்சி

நமது இயக்குனரால் தொடங்கப்பட்ட இந்த வருடாந்திர நிதி திரட்டும் நிகழ்ச்சி 2017-ம் ஆண்டு மூன்று முறை, பிப்ரவரி மற்றும் செப்டம்பர் மாதங்களில் தி. நகர், அழிஞ்சிவாக்கம் மற்றும் கொப்பல் போன்ற இடங்களில் நடைப் பெற்றது. முதல் முறையாக பழவேற்காட்டில் உள்ள செம்பாசி பள்ளிக்குப்ப கிராமத்தில் இந்நிகழ்ச்சி நடைப்பெற்றது.



பழவேற்காட்டில் *Charity Bazaar*

பிப்ரவரி மாதத்தில் திரட்டிய நிதி, அடையார் புற்று நோய் மையத்தில் உள்ள குழந்தைகள் பூங்கா அமைக்க பயன்படுத்தப்பட்டது. மேலும், செப்டம்பர் மாதத்தில் திரட்டிய நிதியை கொண்டு கண் மருத்துவ முகாம்கள், மூக்கு கண்ணாடிகள், பிற கண் சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்பட்டது. இந் நிகழ்ச்சிகளில் உறுதுணையாக இருந்த அறங்காவலர் களுக்கும், நன்கொடையாளர்களுக்கும், சார்லஸ் மற்றும் ராஜ் ஹோல்டிங்ஸின் பணியாளர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.



முகப்பேர் *Charity Bazaar*



அழிஞ்சிவாக்கம் *Charity Bazaar*

| Charity Bazaar விவரங்கள் | திரட்டப்பட்ட நிதி |
|---|---|
| முதல் கட்டம் | ரூ. 1, 08, 075. 00 |
| இரண்டாம் கட்டம் | ரூ. 2, 92, 248. 00 |
| மூன்றாம் கட்டம் | ரூ. 1, 00, 000. 00 |
| **மொத்தம்** | **ரூ. 5, 00, 323. 00** |

Charity Bazaar-ல் உள்ள பொருட்கள் சிலவற்றை கீழ்காணும் தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடையாக வழங்கினோம்.

| வ.எ. | தொண்டு நிறுவனம் | பொருட்கள் விவரம் |
|---|---|---|
| 1 | தி ஆப்பர்சூனிடி பள்ளி, வெப்பேரி | 58 ஆண்கள் ஆடைகள் மற்றும் 238 பெணகள் ஆடைகள் |
| 2 | மெர்சி இல்லம், கீழ்பாக்கம் | 101 குழந்தைகள் ஆடைகள் மற்றும் 262 பெணகள் ஆடைகள் |
| 3 | YWCA of Madras, சமுதாய கல்லூரி | 106 பெண்கள் ஆடைகள் |
| 4 | YWCA of Madras, நவஜீவன் திட்டம் | 33 தைக்காத துணிகள் |
| 5 | பேனியன் இல்லம், சாந்தோம் | 73 ஆண்கள் ஆடைகள் |
| 6 | பார்பரா கெல்லி இல்லம், சோழிங்கநல்லூர் | 101 பெண்கள் ஆடைகள் மற்றும் 64 ஹேர்பேண்டு செயின்கள் |



ஆப்பர்சூனிடி பள்ளியில்



*YWCA of Madras*, நவஜீவன் திட்டம்

# கல்வியறிவு

## கல்வி உதவி தொகை

சமுதாயத்தில் பின் தங்கியிருப்பினும், கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு தி செரியன் ஃபவுண்டேஷன் கல்வி உதவி தொகையை வழங்கி வருகிறது. இவ்வருடம் நமது இலக்கு பகுதிகளில் இருந்து 51 விண்ணப்பங்கள் வந்தது, அதில் தேர்வு செய்யப்பட்ட 20 மாணவர்கள் கல்வி தொகையை பெற்றார்கள்.



பயனாளிகளுடன் இயக்குநர் மற்றும் அறங்காவலர்கள்

அக்டேபர் 27-ம் தேதியன்று, வெங்கட சுப்பா ராவ் பள்ளியில் 6-ம் வகுப்பில் சிறப்பாக படிக்கும் தந்தையற்ற மாணவர் புருஷோத்தமனுக்கு கல்வி உதவி தொகை வழங்கப்பட்டது.



புருஷோத்தமனுடன் அறங்காவலர்கள்

**வெங்கட சுப்பா ராவ் பள்ளி, மெட்ராஸ் சேவா சதன் என்ற சேவை நிறுவனத்தின் மூலமாக நடத்தப்படுகிறது. இந்த பள்ளியை சுற்றி அமைந்துள்ள பகுதியில் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள குழந்தைகளுக்கு மிக குறைந்த செலவில் தரமான கல்வியை இப்பள்ளி வழங்கி வருகிறது**

திரு. நதிர் கெண்டி வழங்கிய நன்கொடையின் Fixed Deposit-ல் கிடைந்த வட்டித் தொகையை கொண்டு கீழ்காணும் மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையை ஜுலை 10-ம் தேதி அன்று வழங்கினோம்.

| மாணவியின் பெயர் | வகுப்பு | உதவி தொகை |
|---|---|---|
| தீபிகா | 8-ம் வகுப்பு | ரூ. 3, 460. 00 |
| கலையரசி | 12-ம் வகுப்பு | ரூ. 2, 560. 00 |
| | மொத்தம் | ரூ. 6, 020. 00 |



மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுடன் இயக்குநர்

**அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றான குண்டூர் சுப்பையா பள்ளி, பொருளாதரத்தில் பின் தங்கிய 850 மாணவிகளுக்கு கல்வியை தரமாக வழங்கி வருகிறது. ஆண்டு தோறும் 100 சதவீதம் தேர்ச்சிப் பெற்ற பள்ளிகளில் இப்பள்ளியும் ஒன்றாகும்.**

## கல்வி உதவி

சிந்தாதரிப்பேட்டை கல்யானம் உயர்நிலை பள்ளியின் நூலகத்திற்கு 43 புத்தகங்களையும், செம்பாசி பல்லிகுப்பம் ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளிக்கு மியூசிக் சிஸ்டம் ஒன்றையும் நன்கொடையாக வழங்கினோம்.



இயக்குநர் நன்கொடை வழங்குதல்

## கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்

நமது நிறுவனம் தத்தெடுத்த இரண்டு பள்ளி (சமூக சேவா பள்ளி மற்றும் ரோட்டரி மாதிரி பள்ளி) குழந்தைகளுக்கு கேக்குகளை வழங்கி கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டோம். மாணவர்கள் Carols பாடல்களை பாடினார்கள். மேலும், YWCA-யின் சமுதாய கல்லூரி மாணவிகளுக்கும் கேக்குகளை வழங்கினோம்.



ரோட்டரி மாதிரி பள்ளியில் நடைப்பெற்ற நிகழ்ச்சி

# அறங்காவலர்களின் செய்தி

**திரு. பெஞ்சமின் செரியன், மேலாண்மை அறங்காவலர்**



மார்ச் மாதம் 3-ம் தேதி முதல் 5-ம் தேதி வரை நடைப்பெற்ற ரோட்டரியின் தெற்கு ஆசிய எழுத்தறிவு மாநாட்டிற்கு (RSALS) துணை தலைவராக சிறப்பாக செயல்பட்டார்.

மேலும் முடி தொழிலில் சிறப்பான சேவை செய்த மையை குறித்தும், சமூக சேவையை குறித்தும், சிகரம் என்ற நிகழ்ச்சிக்காக, முதன்மை அரசியல் தொலைகாட்சி நிருபர் திரு. ஆசை தம்பி அவர்கள் பேட்டிக் கண்டார். இந்நிகழ்ச்சி செப்டம்பர் 3-ம் தேதி கேப்டன் தொலைக் காட்சியில் ஒளிபரப்பானது.

சென்னை மற்றும் வேலூர் மாவட்டத்தில் உள்ள 5 அரசு உதவி பெறும் பள்ளிகளில் மின் வழி கற்றல் பாட கருவிகள் வழங்கினார்.




குண்டூர் சுப்பையா பள்ளியில் துவக்க விழா நிகழ்ச்சி

**திருமதி வல்சா பெஞ்சமின் செரியன், அறங்காவலர்**




YWCA உறுப்பினர்களை கொண்ட சிறப்பு திட்ட குழுவின் துணையுடன் திருமதி வல்சா பெஞ்சமின் செரியன் அவர்கள், மார்ச் 11-ம் தேதி "ஸ்பெக்ட்ரம்" என்ற நிதி திரட்டும் நிகழ்ச்சி ஒன்றை YWCA-காக சிறப்பாக நடத்தினார். YWCA-யின் 125 ஆண்டு வரலாற்றில் இது ஒரு மிகப் பெரிய நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சியின் மூலமாக சமுதாய கல்லூரி கட்டிட நிதிக்கு 21 லட்சம் திரட்ட முடிந்தது.

**திருமதி சாரா B செரியன், அறங்காவலர்**



மார்ச் 11-ம் தேதி "ஸ்பெக்ட்ரம்" என்ற லுறுஊயு நிதி திரட்டும் நிகழ்ச்சியில் திருமதி சாரா B செரியன் அவர்கள் ஒரு அழகிய ஆடியோ, வீடியோ விளக்கப் படத்தையும் வழங்கினார். மேலும், இந்நிகழ்ச்சியை குறித்து ஊடகங்களில் வெளியிட உறுதுணையாக இருந்தார். RITZ பத்திரிக்கையில் நமது தி செரியன் ஃபவுண்டேஷனின் பணிகளை பற்றியும், நமது அறங்காவலர் திருமதி சாரா B செரியன் அவர்களை பற்றியும் ஒரு கட்டுரை வெளியானது.

**திரு ஜார்ஜ் B செரியன், அறங்காவலர்**



மார்ச் மாதம் 3-ம் தேதி முதல் 5-ம் தேதி வரை நடைப்பெற்ற ரோட்டரியின் தெற்கு ஆசிய எழுத்தறிவு (RSALS) மாநாட்டில் வணிக கண்காட்சிக்கு முன்பதிவு செய்யும் தலைவராக சிறப்பாக செயல்பட்டார். அக்டோபர் மாதத்தில் நடைப் பெற்ற "லயோலா" என்ற இரண்டு நாட்கள் நடைப்பெற்ற நிகழ்ச்சிக்கு திரு. ஜார்ஜ் B செரியன் அவர்கள் லயோலா முன்னாள் மாணவர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும், பிராண்ட் தொடர்பு தலைவராகவும் சிறப்பாக செயல்பட்டார்.

**ஊழியர்களுக்கும் பணியாளர்களுக்கும் எங்களது நன்றிகள்**

RAJ HOLDINGS

RAJ GLOBAL HOLDING Pvt. Ltd.

RAJ HAIR INTL Pvt Ltd.

RAJ REDEF MEDIA Pvt. Ltd.

Raj Waterscape Properties Pvt. Ltd.

B & H EXPORTS

RAJ TRADING

**நன்கொடை விவரங்கள்**

தங்கள் நன்கொடைகளை "The Cherian Foundation" என்ற பெயரில் காசோலை (Cheque) அல்லது வரைவோலை (Demand Draft) ஆக எடுத்து எங்களுக்கு அனுப்பலாம். தாங்கள் கொடுக்கும் நன்கொடைகள் அனைத்தும், வருமான வரி சட்டத்தின் 80 G பிரிவின் (u/s 80 G of the Income Tax Act vide Certificate No. DIT (E) No.2 (67)/03-04 கீழ் வரி விலக்கு பெறுகின்றன.

வங்கி கணக்குடையவர் பெயர்: The Cherian Foundation
வங்கி பெயர் மற்றும் கிளை: ICICI Bank, Teynampet
கணக்கு வகை: சேமிப்பு கணக்கு
கணக்கு எண்: 000101212525
ஆர்டிஜிஎஸ்/என்இஎப்டி/ஐஎப்எஸ்சி குறியீடு: ICIC 00000001

**எங்கள் முகவரி**

38, மெலோனி ரோடு, தி. நகர் சென்னை - 600 017

தொலைப்பேசி எண்: 044-4040 4444

projects@cherianfoundation.org

www.cherianfoundation.org

www.facebook.com/thecherianfoundation

**ஆசிரியர் குழு**

திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன், இயக்குநர்

திருமதி. கரினா ஜார்ஜ் செரியன், அறங்காவலர்

திரு. விஜய் சார்லஸ் வெஸ்லி, திட்ட ஒருங்கிணைப்பாளர் TCF